முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 703**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

01.09.2021, புதன்கிழமை

1. சூட்சா சூட்சும மகா சக்தியே
சுத்தநெறி கொண்டு உலகை மாற்ற வந்த
மாட்சிமைமிக்க ஆறுமுக அரங்கமகா ஞானியே
மாதவசியே உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
2. ஆசி தனை சுப்ரமணியர் யானும் இனிதே
அருளுவேன் பிலவ வேங்கை திங்கள் தன்னில்
வாசிவென்ற மகா சக்தி நிலையை
வையகத்தில் உன்பால் வரும் மக்களுக்கு
3. மக்களுக்கு இலகுவாக ஆறுமுகன் யான்
மனமுவந்து தீட்சையாக வழங்கி வர
வருகின்ற உன் கரம்படபெறும் வையகத்தார் தீட்சைகளுக்கெல்லாம்
ஆறுமுகன் யான் தருகின்ற வரமே அப்பா ஐயமற இதன்வழி உலகோர்க்கு
4. உலகோர்க்கு கர்மவினை அகலுவதோடு
உயர்வான ஞானசித்தி உறுதியாகும்
தயவான உன்வழி வருவதாலே
தரணியில் பிறவாபேரும் சித்திக்கக்கூடும்
5. கூடவே ஆசி தந்தேன் அரங்கனே உன்
குறையில்லாத ஆசி ஞானமாக
நிறைவாக மகா சக்தியாக நிரம்பி
நிலவுலகில் உலகோர்க்கு ஞானவழி காட்டும்
6. வழிகாட்டி அரங்கன் உன் வழிவழி
வையகத்தார் தொடர்ந்து வருகவருக
பழிபாவ செயல்களெல்லாம் குறைந்து
பாருலகம் மேன்மையான நிலை காணும்
7. காணவே அரங்கன் தயவாலே
கருணைக்கொண்ட அரங்கன் தர்மத்தாலே
ஞானபூமியாகி இந்த கலியுகம்
ஞானிகள் ஆளுகின்ற ஞான சித்தர் ஆட்சிக்காலமாக மாறும்

8. மாறுதலை தரவந்த மகா தவசியே உன்
மாற்றமும் ஏற்றமும் உன் தர்மத்தால்
ஆறுதலாய் கலியுகம் அடைந்து இனிதே
ஆறுமுகன் என் தயவோடு ஞான ஆட்சிதனை பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–